**தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், சென்னை – 18**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| --- | --- |
| திரு.தயானந்த் கட்டாரியா,இ.ஆ.ப.,<br>ஆணையர்,<br>தமிழ்நாடு மாநில கூட்டுறவுச்<br>சங்கங்களின் தேர்தல் ஆணையம்,<br>273, அண்ணாசாலை,<br>தேனாம்பேட்டை,<br>சென்னை – 600 018. | 1. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்<br>2. அனைத்து செயற்பதிவாளர்கள் |

**ந.க : 773/2023/கூ.தே.1** **நாள் : 14.06.2023**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் – ஒட்டுமொத்த தேர்தல்கள் 2023 – மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பான W.P.No.5171/2023–ன் மீதான ஆணை – ஆறுமாத கால அவகாசத்திற்குள் உறுப்பினர் பட்டியல் சரிசெய்த பின்னர் ஆணையம் தேர்தல்கள் நடத்துதல் – உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல் – தொடர்பாக.

**பார்வை :**

1) ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.805/2022/கூதே2(1), நாள் 29.08.2022
2) ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.805/2022/கூதே2(2), நாள் 29.08.2022
3) ஆணையத்தின் சுற்றறிக்கை ந.க.805/2022/கூதே2(3), நாள் 29.08.2022
4) திரு.K.S சண்முகம் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை எண் 5171/2023, நாள் 21.02.2023
5) மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிப்பேராணை எண் 5171/2023, தீர்ப்பு நாள் 28.04.2023

--//--

பார்வை (1) (2) மற்றும் (3) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையத்தின் சுற்றறிக்கைகளில், 2023 ஒட்டுமொத்த (Enmasse) தேர்தல் 5 ஆண்டு பதவிக்காலம் முடிவடைந்த சங்கங்கள் மற்றும் இதர வகையிலும் தேர்தல்கள் நடத்த வேண்டிய கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல்கள் ஆகியவற்றை மார்ச் 2023 முதல், ஆணையத்திற்கேற்பட்ட சட்டபூர்வ கட்டளைப்படி, (Statutorily mandated) நடத்த வேண்டியுள்ளது பற்றியும், அவ்வகையில் உறுப்பினர் பட்டியல்களை சரி செய்தும், இதர வகையிலும் அனைத்துவகை ஆரம்ப கட்ட நடவடிக்கைகளையும் மேற்கொண்டு தயார்நிலையில் இருக்கும்படியும் அறிவுறுத்தப்பட்டது.

2) இந்நிலையில் சங்கங்களின் உறுப்பினர் பட்டியலை முழுமையாகச் சரிசெய்த பின்னரே கூட்டுறவு சங்கத் தேர்தல்களை நடத்திட வேண்டும் என்றும், அதற்கான உரிய ஆணை வேண்டியும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் முன்பாக பார்வை(4)–ல் கண்ட நீதிப்பேராணை மனு தாக்கல் செய்யப்பட்டது.

3) இம்மனு மீது விசாரணை மேற்கொண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம், கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல்களை சரிசெய்திட ஆறுமாத கால அவகாசம் வழங்கியும், அதன்பின்னர் அவற்றின் தேர்தல்களை ஆணையம் நடத்திட வேண்டும் என்றும் பார்வை (5)–ல் கண்டுள்ள ஆணை (நகல் இணைப்பு) வழங்கியது.

4) பார்வை (5)–ல் கண்ட மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணையில் உறுப்பினர்/வாக்காளர் பட்டியல் சரிசெய்திட வழங்கியுள்ள 6 மாத கால அவகாசம் என்பது மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணை தேதியான 28.04.2023 தேதியிலிருந்து தொடங்குகிறது என்று ஆணையம் தெரிவித்துக் கொள்கிறது.

5) மேலே பத்தி (4)–ல் தெவித்துள்ளபடி 6 மாத கால அவகாசம் 27.10.2023 வரை உள்ளதால் அக்கால அளவிற்குள் தங்களது நிர்வாகப்பொறுப்பிலுள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் பட்டியல்களில் உள்ள குறைபாடுகளைச் சரிசெய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. 27.10.2023–க்கு பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின்

தேர்தல்களை ஆணையம் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் மற்றும் வெளிப்படைத்தன்மையுடனும் (Free, Fair and Transparent) நடத்திடும் வகையில், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆணையம் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறது.

**(ஒம்)/-**
**ஆணையர்**

**ஆணையருக்காக**

**இணைப்பு** : மேற்கண்டவாறு.

**நகல்**

1) அரசு முதன்மைச் செயலாளர்,
கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை-9.
2) தொடர்புடைய அரசு செயலாளர்கள்.
3) அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள்.
4) இருப்பு கோப்பு – 2023.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED: 28.04.2023

CORAM

THE HON'BLE MR.T.RAJA, ACTING CHIEF JUSTICE
AND
THE HON'BLE MR.JUSTICE D.BHARATHA CHAKRAVARTHY

WP No.5171 of 2023
and WMP Nos.5174 and 5175 of 2023

K.S.Shanmugam ... Petitioner

-vs-

1. Tamil Nadu State Co-operative Societies Election Commission, rep. by its Commissioner, No.273, Kamadhenu Supermarket (1st Floor), Anna Salai, Chennai 600 018.

2. The Additional Chief Secretary to Government, Co-operation, Food and Consumer Protection Dept., Secretariat, Fort St. George, Chennai 600 009.

3. The Registrar of Co-operative Societies/ State Election Officer, N.V.N.Maligai, No.170, E.V.R. Periyar High Road, Kilpauk, Chennai 600 010.

4. A.A.226 Modakkurichi Primary Agricultural Cooperative Credit Society Ltd., rep. by its President/Secretary, Chinniampalayam Post, Modakurichi, Erode 638 104. ... Respondents

Prayer: Writ Petition under Article 226 of the Constitution of India praying for a Writ of Mandamus to direct the respondents 1 to 3 to obtain Form 16 from all eligible members of the 4th respondent and all other Cooperative Societies, by including their respective Aadhar Number and Family Card Number, to update the List of Members of the 4th respondent and all other Cooperative Societies, as of first day of January of each year, by including all the eligible members and by deleting the names of deceased/left/shifted members, including those who do not have the minimum shareholding, and notify the Final Members' List in the Notice Board of the 4th respondent and all other Cooperative Societies and thereafter conduct election to the 4th respondent and all other Cooperative Societies in the State of Tamil Nadu.

Gy0002511

Scanned with OKEN Scanner

For the Petitioner : Mr.V.Prakash
Senior Counsel
for Mr.P.V.Vinayakhamurthi

For the Respondents : M/s.M.Sneha (Standing Counsel)
for R1
Mr.J.Ravindran
Addl. Adv. General
assisted by Mr.A.Selvendran,
Spl.G.P. for RR 2 and 3

: Mr.P.Muthukumar
State Govt. Pleader for R-4

ORDER

(Made by the Hon'ble Acting Chief Justice)

Mr.K.S.Shanmugam, S/o.Songappa Gounder, has come up with this writ petition seeking issuance of writ of mandamus to direct respondents 1 to 3 to update the list of the members, notify the final members' list and thereafter to conduct election of the fourth respondent society and all other cooperative societies.

2. Today, the first respondent has filed a counter-affidavit and based on the averments in the counter-affidavit, Mr.J.Ravindran, learned Additional Advocate General appearing on behalf of the respondents 2 and 3, would submit that the second respondent has pointed out various shortcomings and irregularities in the electoral rolls and therefore, six months' time is sought to rectify the same and besides, the term had also expired on 02.04.2023 with respect to 4201 cooperative societies. Therefore, he would submit that the election will be conducted after the electoral rolls are rectified and are in strict compliance of the Act, Rules, bye-laws and circulars issued by the Commission to ensure fair and transparent elections.

3. Recording the averments made in the counter-affidavit and the submission of the learned Additional Advocate General, this writ petition is disposed of and six months' time is granted as undertaken in the counter-affidavit for the second respondent to rectify all the lapses and defects in the electoral rolls and thereafter, the first respondent shall hold the election. There will be no order as to costs. Consequently, WMP Nos.5174 and 5175 of 2023 are closed.

Sd/-
Assistant Registrar(CS-IX)

//True Copy//

Sub-Assistant Registrar

Gy0002512

Scanned with OKEN Scanner

sra

To

1. The Commissioner,
   Tamil Nadu State Co-operative Societies
   Election Commission, No.273, Kamadhenu
   Supermarket (1st Floor), Anna Salai,
   Chennai 600 018.

2. The Additional Chief Secretary to Government,
   Co-operation, Food and Consumer Protection
   Dept., Secretariat, Fort St. George,
   Chennai 600 009.

3. The Registrar of Co-operative Societies/ State
   Election Officer, N.V.N.Maligai, No.170,
   E.V.R. Periyar High Road, Kilpauk,
   Chennai 600 010.

4. The President/Secretary,
   A.A.226 Modakkurichi Primary Agricultural
   Cooperative Credit Society Ltd.,
   Chinniampalayam Post, Modakurichi,
   Erode 638 104.

+1cc to M/s.K.Arunagiri, Advocate, S.R.No.27265
+1cc to M/s.M.Sneha, Advocate, S.R.No.26955

WP No.5171 of 2023

CA(CO)
SB(06/06/2023)

Gy00025l3

Scanned with OKEN Scanner